பங்களிப்பைச் செய்யக் கதை முடிவடைகிறது. குரல் கட்டுப்பாடு, சைகைகள், முகபாவம் ஆகியவற்றின் அடிப்படையில் உரைகள் உணர்வுப் புலப்பாட்டுடன் வழங்கப்படவேண்டும். இந்த மாற்றுவழி சிறு குழுக்களுக்கே ஏற்புடையது.

- ஆசிரியர் ஒரு தலைப்புத் தொடர்பாக சொற்களுள்ள அட்டைகளை பகிர்கிறார். அவர் அட்டையிலுள்ள ஒரு சொல்லைக் கொண்ட வாக்கியத்துடன் ஒரு கதையைத் தொடங்குகிறார். ஒரு மாணவர் தன்னுடைய அட்டையிலுள்ள சொல்லைக்கொண்ட வாக்கியத்துடன் கதையைத் தொடர்கிறார், இவ்வாறு கதை தொடர்கிறது.
- மேலும் கூடிய ஊக்குவிப்புக்கு உரை எழுத்துருக்கள் பதிவுசெய்யப்படலாம், அவை இறுவட்டுகளாக அல்லது MP3 கோப்புகளாக ஆக்கப்படலாம்.

# 26 அரை - உண்மை நாடகம், சமூக வகிபாக நாடகம்

## இலக்கு

*#8 இல் விவரிக்கப்பட்ட எளிமையான வகிபாக நாடகத்துக்கு மாறாக, பின்வரும் வகை கூடிய விரிவான வழிகாட்டுதல்களுடனான மிக அதிகமாக வடிவமைக்கப்பட்ட உருவமைப்புகளை உள்ளடக்கியது. இதன் நோக்கம் சொல்லாடல் திறன், வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்ட மொழிப் பயன்பாடு, மொழியிலா வழிமுறைகள் (சைகைகள், முகபாவங்கள்) மற்றும் தன்னை நம்பத்தகு முறையில் முன்னிலைப்படுத்தும் திறன் என்பவற்றை வலுவடையச் செய்தல் ஆகும். தலைப்பைப் பொறுத்து இத்தகைய காட்சிகள் பேச்சு மதிநுட்பங்களையும் கருப்பொருள் தொடர்பான சொற்களஞ்சியத்தையும் விரிவடையச் செய்தலுக்குப் பங்களிக்கின்றன.*

தரம் 3 - 9

30 - 45 மணித்துளிகள்

**கருவிகள்:**
சில தூண்டிகள்

**நடைமுறை:**

- ஆசிரியர் முரண்பாடு அல்லது பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு சூழலை விவரிப்பார். எடுத்துக்காட்டுகள்:

  அ) பள்ளியில், இரண்டு மாணவர்கள் சண்டையிட்டனர், ஏனெனில் இருவருள் ஒருவர் தவறுதலாக மற்ற மாணவரின் பென்சிலை உடைத்துவிட்டார்.

  ஆ) தங்கள் ஓய்வு வேளையில்: இரண்டு உள்ளூர் பிள்ளைகள் அல்லது இளையவர்கள் இரு புலம்பெயர்ந்தோரை நகையாடுகின்றனர்.

  இ) தன் தாய் நாட்டில் விடுமுறையில்: அங்கு விடுமுறையில் உள்ள ஓர் இளம் பெண்ணை அங்கு வாழும் இரு இளையவர்கள் நகையாடினர்.

  ஈ) வீட்டில் இரவுணவு வேளையில், ஒரு பிள்ளை தன் பெற்றோர்கள் முற்றாக விரும்பாத ஒன்றைக் கேட்கின்றது (எ.கா. ஒரு நாயைப் பெறுவது, அல்லது டிஸ்கோவுக்குப் போதல்).
- இந்த நிலைமையை மாணவர்கள் எவ்வாறு எதிர்கொள்வார்கள் என்பது பற்றி குழு அல்லது வகுப்புக் கலந்துரையாடல்கள். கேட்கக்கூடிய கேள்விகளும் தூண்டிகளும்: இந்த நிலையில உங்கள் உணர்வு எவ்வாறு இருக்கும்? எத்தகைய நடந்துகொள்வீர்கள்? எத்தகைய சாத்தியமான தீர்வுகள் உள்ளன?
- தேவை ஏற்படும்போது, மொழி வழிமுறைகள் பற்றி ஒரு சுற்றுக் கலந்துரையாடல்களை உள்ளடக்கவும். பார்க்கவும் "குறிப்புகள்" மறுபக்கத்தில்.
- தனிப்பட்ட எடுத்துரைப்புகளில் எத்தகைய வழிகாட்டுவிதியினை பின்பற்றவேண்டும் என்பது பற்றி ஒரு சிறிய கலந்துரையாடலில் ஈடுபடுக (எ.கா. நேரிடக்கூடிய தீர்வு, மொழியின் தரம், விளங்கிக்கொள்ளல், முதலியன). வழிகாட்டுவிதி தெளிவானதாகவும் எல்லா மாணவர்களும் அறிந்ததாகவும் அமையவேண்டும். இந்நிலைக்குப் பொருத்தமான வழிகாட்டுவிதி அட்டவணைகளுடன் செயற்பட, அறிமுகத்தில் இயல் 3 ஐ பார்க்கவும.
- மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்படுகிறார்கள் (அல்லது தாம் தம்மிடையே குழுக்களை அமைக்கின்றனர்). அவர்கள் தம் எடுத்துரைப்பை ஏற்பாடு செய்ய 10-15 மணித்துளிகள் இருக்கின்றன. எடுத்துரைப்பு 5-8 மணித்துளிகளுக்கு மேலே எடுக்கக்கூடாது.

III

- குழுக்கள் தம் தீர்வுகளை நாடகப்படுத்துகின்றனர். ஒவ்வொரு அளிக்கையினையும் தொடர்ந்து (அல்லது குறைவான குழுக்களிருப்பின், ஒவ்வொரு பயிற்சி முடிவில்) மற்றைய மாணவர்கள் வழிகாட்டுவிதி சார்ந்த பின்னூட்டல்களை வழங்குவர்.

**மாற்றுவழி:**

- ஒரு கதையை விட, ஒரு எதிர்பாராத நிலையை உருக்காட்டும் படம் பயிற்சியின் அறிமுகத்துக்கும் அறிவுறுத்தலுக்கும் துணைசெய்யும்.
- வேறு காட்சிகளை மாணவர்களே பரிந்துரைக்கலாம்.

**குறிப்புகள்:**

- கலந்துரையாடலின் பின்னர் கருப்பொருளைப் பொறுத்து, தொடர்புடைய காட்சிக்கு வேண்டப்படும் மொழி வழிமுறைகளை மதிப்பாய்வு செய்தலைச் சேர்த்துக் கொள்ளுதல் பயனுடையது. இது பொருள்சார் சொற்களஞ்சியத்தை அல்லது பொதுவான கருத்தாடல் நோக்கங்களுக்கான பயன்தரு மொழி வழிமுறைகளை உள்ளடக்கலாம். அறிமுகத்தில் 2 இ யையும் பார்க்கவும்.
- சமூகத் தகைமையைக் கூட்டுதற்கு முரணறு தீர்வுக்கு வேண்டிய மதியுரைகள் குறிப்பாகப் பயனுடையவை. தொகுதி 4 "பல்பண்பாட்டுத் திறன்கள்", #1.5, 2.6, 4.7, 5.2, 5.5, 5.7, 6.7 ஆகியனவற்றையும் பார்க்கவும்.

# 27 கற்பனை நாடகம், எழுத்துருக்களை நாடகமாக்கல்

**இலக்கு**

*ஓர் எழுத்துருவிலிருந்து காட்சிகளை நாடகமாக்குதல் எழுத்துரு விளக்கத்துக்குத் துணைசெய்கிறது, படிக்கின்ற தொடர்களுக்கு உணர்ச்சியூட்டுதற்குப் பங்களிப்புச் செய்கிறது, மாணவர்களின் சொல் மற்றும் தொடர் திறனை மேம்படுத்தவும் விரிவாகவும் ஊக்குகிறது. எழுத்துருக்களை நாடகமாக்குதல் பா.மொ.க வுக்கு, ஓர் மதிப்புமிகு செயற்பாட்டுக்கும் - குறிப்பாக எழுத்து மற்றும் பேச்சுமொழி கல்விக்கு ஏனைய இலக்குப் பரப்புகளுக்கு, #8, 26, 28 யும் பார்க்கவும்.*

தரம் 2 - 9

20 - 30 மணித்துளிகள்



**கருவிகள்:**
சில தூண்டிகள்

**நடைமுறை:**

- நாடகமாக்குதற்குப் பொருத்தமான ஓர் எழுத்துரு அல்லது ஒரு கதை, மாணவர்கள் தாமாகப் படித்தல் அல்லது ஆசிரியர் உரத்துப் படித்தல் அல்லது ஆசிரியரால் சொல்லப்படல் என்பன இதன் ஆரம்பப் புள்ளியாக அமையும். எழுத்துருவுக்குப் பதிலாக ஒரு பட நூலாகவும் அமையலாம்.
- பொருத்தமான ஒரு காட்சியைத் தொடர்ந்து (அதில் பெருந் தொகை ஆட்கள் தோற்றுகின்றனர்) அல்லது கதையில் குறிப்பாக உணர்வூட்டும் இடத்தில், ஆசிரியர் படித்தல்களில் குறுக்கிடுகிறார். அடுத்து, மாணவர்கள் சிறு குழுக்களாகக் காட்சியை மீண்டும் நடிக்கும்படி அல்லது அக்காட்சியின் தொடர்ச்சியைக் கற்பனை செய்து மேடையேற்றும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- தெளிவான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன: 5-10 மணித்துளிகள் ஏற்பாடு செய்யும் நேரம், மேடையேற்றல் ஆகக் கூடியது 5 மணித்துளிகள். மதிப்பீட்டுக்குப் பயன்படுத்த உறுதிப்படுத்தப்படும் அளவுகோல் அதேமாதிரியாக வரையறை செய்யப்பட்டுள்ளது. (பார்க்கவும் #26 மொழிப் பண்புகளையும் உள்ளடக்கிய அளவுகோல் நிரல்நிரையைப் பயன்படுத்துதல் நன்றாகும்.
- மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர் அல்லது தங்களுக்குள் குழுக்களை அமைத்துக்கொள்கின்றனர். அவர்களுக்கு தங்கள் அளிக்கையை ஆயத்தம் செய்ய 5-10 மணித்துளிகள் இருக்கின்றன. அளிக்கை ஆகக் கூடியது 5 மணித்துளிகள் வரை செல்லலாம்.
- குழுக்கள் தம் தீர்வுகளை நாடகப்படுத்துகின்றனர். ஒவ்வொரு அளிக்கையினையும் தொடர்ந்து (அல்லது குறைவான குழுக்களிருப்பின், ஒவ்வொரு பயிற்சி முடிவில்) மற்றைய மாணவர்கள் வழிகாட்டுவிதி சார்ந்த பின்னூட்டல்களை வழங்குவர்.